**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2024**
**D031 இலக்கணம் – 4 (யாப்பு, அணி)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – **1** இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு **15** மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. இலக்கண விளக்கம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?
2. அளபெடுக்கும் மெய் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
3. தளையின் பெரும் இரு பிரிவுகளைக் குறிப்பிடுக.
4. விகற்பம் என்பதன் பொருள் என்ன?
5. நிலைமண்டில ஆசிரியப்பாவுக்குரிய சிறப்பான ஈறு எது?
6. வெளிவிருத்தத்தின் அடி எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
7. ஐஞ்சீரடிகள் அருகி வரும் பாக்கள் யாவை?
8. வகையுளி என்றால் என்ன?
9. முத்தகம் என்பதன் பொருள் யாது?
10. சைவ சமயக் காப்பியங்கள் இரண்டினைக் கூறு.
11. இன்பம் என்னும் குணப்பாங்கின் வகைகளை எழுதுக?
12. காந்தம் குறித்துக் கௌட நெறியினர் கூறுவது யாது?
13. நிரல்நிறை அணியை நன்னூல் எவ்வாறு கூறுகின்றது?

14. சிலேடை அணிக்குரிய வேறு பெயர் யாது?

15. மானைப் புகழ்வது யாருக்குப் பழிப்பாயிற்று?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. ஐகாரக்குறுக்கம் சான்றுடன் எழுதுக.
2. விகற்பம் உடைய தொடைகள் எத்தனை வகைப்படும் அவை யாவை?
3. தாப்பிசைப்பொருள்கோள் சான்றுடன் எழுதுக.
4. குறள்வெண்செந்துறை என்றால் என்ன?
5. தொகைநிலைச் செய்யுள் வகைகளை எழுதுக.
6. சமாதி குறித்துக் கௌடர் தம் கருத்து யாது?
7. தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன?
8. புணர்நிலை அணி என்றால் என்ன? எத்தனை வகைப்படும்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) அசைச்சீர் வகைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) வெண்பாவின் வகைகளை விவரித்து எழுதுக.

2. (அ) எதுகைக்கும் மோனைக்கும் புறனடை பற்றி விவரி.

(அல்லது)

(ஆ) காப்பிய வடிவம் குறித்து தொகுத்தெழுதுக.

3. (அ) உவமை அணியின் வகைகளைச் சான்றுடன் விவரி.

(அல்லது)

(ஆ) சிலேடை அணியின் வகைகளைத் தொகுத்தெழுதுக.

***